24.07.2025
CC.72/2017
PW–2, அய்யர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 9வது வகுப்பு படித்துள்ளேன். டி.வி.எஸ்.நிறுவனத்தில் மோல்டராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். எனது மாமியார் பெயர் ராக்கியம்மாள். எனது மாமியாருக்கு இரண்டு பெண் குழந்தைகள். அதில் என் மனைவி மூத்தவள். 1ம் எதிரி இளையவள் ஆவார். எனது மாமியாருக்கு 3 இலக்க தோட்டமும், 1 வீடும் உள்ளதா என்றால் உள்ளது. 08.10.1993ல் சில சொத்துக்களை மட்டும் எனது மனைவி பெயருக்கு எனது மாமியார் உயில் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 2ம் எதிரி ராஜு உதகமண்டலத்தில் மின்சாரதுறையில் வேலை பார்த்தாரா என்றால் சரிதான். எனது கொழுந்தியா 2வது எதிரி திருமணம் முடிந்த பிறகு கோத்தகிரியில் தனது கணவருடன் வசித்து வந்தாரா என்றால் அவ்வப்பொழுது இருந்து வந்தார். எனது மனைவி பெயருக்கு எனது மாமியார் உயில் எழுதிக்கொடுத்ததால் எங்களுக்கும் எதிரி குடும்பத்திற்கும் மன வருத்தம் இருந்தது என்று சொன்னால் இல்லை. எந்த வருடம் முதல் எங்களுக்கும் எதிரி குடும்பத்தார்களுக்கும் 2002ம் வருடம் முதல் பேச்சு வார்த்தையில்லை. 23.07.1993ல் எதிரி கருப்பாயிக்கு உயில் எதுவும் எழுதி வைத்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது. ஆனால் கருப்பாயி மட்டும் மகளாக கருதி ஒரு உயில் எழுதி வைத்ததாக தெரியா வந்தது. திருமங்கலம் உரிமையியல் நீதிமன்றத்தில் எனது மனைவி சிவில் வழக்கு தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளார் என்றால் சரிதான். மதுரை சார்பு நீதிமன்றத்தில் அதற்கு எதிராக மேல் முறையீடு செய்து 1ம் எதிரிக்கு சாதகமாக தீர்ப்பு வந்தது என்றால் சரிதான். பின்பு உயர் நீதிமன்றத்தில் எனக்கு சாதகமாகி பின்பு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மாண்புமிகு உச்ச நீதிமன்ற கட்டளை படி எங்கள் இருதரப்பையும் பேசி இனக்கமாக முடிவு செய்யச் சொன்னதின் பேரில் நாங்கள் சென்னை உயர் நீதிமன்ற முதன்மை நீதிமன்றத்தில் பேசினோம் என்றால் சரிதான். எனது மாமியார் 1999 - 2000ம் காலத்தில் ஜீவன்தாரா என்ற திட்டத்தின் கீழ் கிணறு தோண்டி மின்இணைப்பு கோரி மனு செய்தார் என்றால் சரிதான். அந்த மனு நிலுவையில் இருக்கும் போதே எனது மாமியார்

இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமியார் இறந்த பிறகு சர்வே எண் 222/01ஏ, 1பி என்ற ஒரு ஏக்கர் நிலம் மட்டும் 1ம் எதிரி பெயரிலும் அ.சா.1 புகார்தாரர் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். அதற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மின்இணைப்பு எண் 417 என்றால் சரிதான். 2005 ல் 1ம் எதிரி பெயரில் மின்இணைப்பு வழங்கபட்டது. நான் திருமணம் முடிந்த முதல் நான் வசிக்கும் பகுதியில் உள்ள மேற்படி தோட்டங்கள் மற்றும் வயக்காடுகளை பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை எஸ்.சி.நம்பர் 417 என்ற மின்இணைப்பு கருப்பாயி பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். அதற்காக நான் அதனை இரத்துச்செய்ய மின்சார துறையிடம் மனு கொடுக்கவோ அல்லது என் மனைவி பெயருக்கு பெயர் மாற்றம் எதுவும் முயற்சி செய்துள்ளேனா என்றால் இந்த மனு தாக்கல் செய்துள்ளோம். அ.சா.ஆ1 புகார் யாரால் சொல்லி தட்டச்சு செய்யபட்டது என்றால் எனக்கு தெரிந்தவரிடம் சொல்லி தயார் செய்தோம். அ.சா.ஆ.1 புகார் தயார் செய்வதற்கு முன்பு அ.சா.ஆ.2 ஐ நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ1 ஐ பெற்றுக்கொண்டு விசாரணை முடிவில் சிவில் நீதிமன்றத்தில் நிவாரணம் தேடிக் கொள்ளுமாறு சொன்னார்கள் என்றால் சரியல்ல. அ.சா.ஆ2 ஐ விசாரணையில் போலிசார் எங்களிடம் காட்டி விசாரித்தார்களா என்றால் நகல் வாங்கி காண்பித்து விசாரித்தார்கள். அ.சா.ஆ2 அசல் ஆவணத்தை நானும் எனது மனைவியும் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூட்டுப்பட்டாவில் உள்ள நபர்களுக்கு அதில் உள்ள மற்ற கூட்டுப்பட்டாதாரர் அனுமதியில்லாமல் மின்சார இணைப்பு வழங்கலாம் என்றாலும் அதற்கு எங்களுடைய அனுமதிதேவையில்லை என்றால் சரியல்ல. அதனால் எங்களுடைய சம்மதக்கடிதம் எதிரிகளுக்கு தேவைப்படாத காரணத்தினால் அ.சா.ஆ-2 ஆவணத்தை எதிரிகள் உருவாக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சிவில் பிரச்சினையை மனதில் வைத்துக்கொண்டு பொய்யான ஆவணங்களை உருவாக்கி எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது கருப்பாயி என்பவருக்கு தனிப்பட்டா கொடுக்கப்பட்டதால் அதனை எதிர்த்து

ஏதேனும் மேல் முறையீடு செய்தேனா என்றால் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது செய்யவில்லை.